ஸ்ரீதந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

சௌமிய சித்திரை

MAY 1970





தொகுதி 32 பகுதி 5

Vol. 32 No. 5



ஆசிரியர்:
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராம சர்மா,

பிரசுரகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.



| | |
|---|---|
| நல்ல செய்தி | ... 105 |
| விலங்கினத்துச் சரக்குகள் | ... 107 |
| ஸஹஸ்ரயோகம் | ... 117 |



வருஷச் சந்தா ரூ.5/-

Annual Subscription Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
மானேஜர் (வீடு) போன் நெ. 26

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி–1.
Phone No. 3660

விற்பனை டிப்போ :
31, சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி–2
Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் மருந்துகளின் செய்முறையை விளக்கும

## ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 6–00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM: KALIA

Phone: Off. 3232 / Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam per gram | | 9-00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

## PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni per gram | | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

## CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

## AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6½% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி : "அம்ருதம்"  P. B. No. 1382.  போன் : 26006

# ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் ; | 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, | 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, | 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 | ,, | 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, | 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, | 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, | 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு திருச்சூர்-1 | ,, | 378 |
| 9 | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, | 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | ,. | 33758 |
| 12 | இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 | ,, | 4891 |
| 13 | 229 ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, | 33988 |
| 14 | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் **P. V. ராமவாரியர்**
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

## BHANOT BROTHERS
(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

## LUDHIANA - PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

## *K. L. TALWAR & BROS.,*

**MUSK MERCHANTS,**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 32<br>Vol. 32 | ஸௌமிய சித்திரை<br>1970 மே | பகுதி 5<br>No. 5 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## நல்ல செய்தி

எந்தக் காரியத்திலும் நோக்கம் நல்லதாக இருந்தால் அது நன்மையிலேயே முடியும் என்பது பெரியோர்களின் கருத்தாகும். தமிழ் நாட்டில் ஆளும கட்சி தற்சமயம் பல துறைகளில் நல்ல நோக்கம் கொண்டு வேலை செய்து வருகிறது ஏழைகளுக்கு அதிகமான சலுகைகள் காண்பிக்கப்படுகின்றன. கல்வி விஷயத்திலும் அதிக ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது இந்திய வைத்யத்திற்கே முடிவு கட்டியதுபோல் கீழ்ப்பாக்கத்தில் மிக நன்ருக நடந்துவந்த ஒரு கல்லூரியை காங்கிரஸ்காரர்கள் ஆங்கில வைத்யக் கல்லூரியாக மாற்றியது போன்ற அநீதி வேறு ஒன்று இருக்க முடியாது என்பது அறிஞர்கள் கருத்தாகும். ஒனறிற்காக ஏற்படுத்தப்பட்ட தொகையை மற்ருென்றிற்கு வினியோகிப்பது சரியல்ல. இந்திய வைத்யத்திற்காக ஏற்பட்ட கட்டிடம் முதலியன தற்போது

ஆங்கில வைத்ய போதனைக்கு உபயோகிக்கப்படுகின்றன என்பதனை நினைக்கு போது இந்திய வைத்யர்களுக்கு எவ்வளவு வருத்தம் ஏற்படும் என்பது சொல்லாமலே விளங்கும் தற்பொழுது ஆளும்கட்சி சித்த வைத்யத்திற்கு சலுகை காட்டுவதை நாம் வரவேற்கிறோம். கனம் அறநிலைய பாதுகாப்பு மந்திரி அவர்கள் கோவிலின் உபரி நிதிகளை சித்த வைத்ய ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி அதில் செலவு செய்ய விரும்புகிறார். இது மிகவும் நல்ல காரியம். கோவில்களுக்கும் சித்தர்களுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு கரூர் பழனி முதலிய இடங்களில் கோவில்களிலேயேதான் சித்தர்கள் சமாதி அமைந்து உள்ளது. சித்தர்கள் எல்லோரும் மிகுந்த கடவுள் பக்தி படைத்தவர்கள். ஆகையால் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட வைத்யத்திற்கு கோவில் நிதி பயன்படுவது மிகவும் களிப்பைத் தருகிறது. ஆனால் பொதுவாக ஒரு விஷயத்தைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. கோவில் தெய்வம், மதம் இவை எல்லாம் ஒன்றுக்கொன்று பிணைந்துள்ளன. அந்தந்த மதத்தவர்கள் அவரவர் ஆலயத்தை அணுகி தெய்வ வழிபாடு செய்வார்கள். ஆகவே ஆலயத்தையும் மதத்தையும் தனியாகப் பிரிக்க முடியாது. ஆலயங்களின் வருமானங்கள் அதிகப்படியாக இருந்தால் அதற்குச் சரியான உபயோகம், மதங்களை போதித்து ஆஸ்திகத்தை வளர்த்துப் பாதுகாப்பதேயாகும். ஆகவே ஆலயங்களின் பணங்களை எடுத்து நடத்தப்படும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சித்த வைத்ய நிலையங்களிலும் மதபோதனை ஓர் முக்யமான பாடதிட்டமாக இருக்க வேண்டும். ஆலய நிதியால் ஏற்படுத்தப்பட்ட கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகிறவர்கள் எந்த மதத்தினராக இருந்தாலும் அவரவர் மதக்கோட்பாடுகளை கடைப்பிடித்து நடப்பவர்களாக இருக்க வேண்டும். தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இவர்கள் நாஸ்திகர்களாகவும் மத நம்பிக்கையற்றவர்களாகவும் இருந்தால் வேலியே பயிரை அழித்த கதையாக முடியும். ஆகவே கனம் அறநிலைய அமைச்சரும் கோயில் நிதிகளை மிக ஜாக்ரதையாக விநியோகிக்க வேண்டும். நல்ல மாணுக்கர்களைச் சேர்க்க வேண்டும். கட்டுப்பாட்டிற்கு முதலிடம் தரப்படவேண்டும். சித்த வைத்ய ஆராய்ச்சி மிகவும் முக்யமானதொன்றே. அதில் ஈடுபடுகிறவர்கள் சித்த வைத்யத்தைப் பயின்றால்மட்டும் போதாது. நடை உடை பாவனைகள் எல்லாவற்றாலும் சித்தர்களைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சித்த வைத்யத்திற்கு மதிப்பும் செழிப்பும் ஏற்படுத்தமுடியும். சித்த வைத்யம் என்பதை தேவ வைத்யம் என்றே கூறவேண்டும். ஆகவே இதில் தெய்வீகத் தன்மை மிகவும் நிரம்பியுள்ளது என்பதுபுலனாகும். தெய்

வத்திடம் ஆஸ்திகனுக உள்ளவனுக்கு எவ்வளவு பக்தி இருக்குமோ, அவ்வளவு பக்தியும் தெய்வ வைத்யமான சித்த வைத்யத்திலும் இருக்க வேண்டும். அப்போதுதான் அதன் பலனை நாம நன்கு அடைய முடியும். சித்தர்களைப் பூஜிப்பதனுல் அவர்களின் அருளைப் பெறமுடியும் என்பது பெரியோர்களின் கொள்கை. அக்கொள்கைகளைக் கடைப்பிடித்து ஆராய்ச்சி செய்தால் உலகத்தில் பிணியே இல்லாமல் செய்துவிடலாம். அரசாங்கம் இவ்விஷயத்தில் சிரத்தையுடன் நடக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

---

# சித்த ஆயுர்வேத யூனனி முறை மருந்துகளில் விலங்கினத்தினின்று பெறப்படுஞ் சரக்குகள்

---

**Dr. Y. கொண்டல் ராவ், L.I.M.,**

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

## 3. எலும்புகளும், பற்களும்

இத்தலைப்பின்கீழ் முதுசெலும்புடையவற்றின் மண்டையோடுகள், எலும்புகள், யானையின் தந்தம் இவை கொண்டுவரப் பட்டுள்ளன. மனிதனின் மண்டையோடும், நாயின் மண்டையோடும், ஆமையின் முதுகோடும். ஆட்டின் முதுகெலும்பும், மற்ற எலும்புகளின் உட்பொருளும், ஆனைத்தந்தமும் பற்றி இங்கு பேசப்படும்.

10 & 11. மனிதனின் மண்டையோடு : (வடமொழி : கபால அஸ்தி, ஆங்கிலம்: ஹ்யூமன்ஸ்கல்), நாயின் மண்டையோடு வடமொழி: ச்வகபாலம் ஆங்கிலம்: டாக்ஸ்கல்): மனிதனின் அல்லது நாயின் மண்டையோட்டுப் பற்பம் சித்த மருத்துவத்திற்கு பேரண்டபற்பமென்ற பெயருடன், மயக்கம், சூதக சந்நி, சித்தப் பிரமை ஆகிய நோய்களிற் சிறப்பாகக் கொடுக்கப்படும்.

12. ஆமையோடு : (வடமொழி : கூர்ம கபால அஸ்தி; ஆங்கிலம்: டார்ட்டிஸ் ஷெல்) : பெரும்பான்மை நிலத்திலும், குளங்களிலும் வாழும் ஆமைகளின் முதுகோடு பற்பமாக்கப்பட்டுக்

குழந்தைகளின் மாந்தம் மற்றும் வயிற்றுப்போக்கு ஆகிய பிணிகளிற் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் ஆமையோட்டுப் பற்பம் மூலப்பிணிக்கும் கொடுக்கப்படும். இப்பற்பம் ஆயுர் வேதத்தில் கூர்மகபால பஸ்ம்மா என வழங்கப்படுகின்றது.

13 ஆட்டெலும்புகள் : வீட்டில் வளர்க்கப்படும் ஆடு விலங்கியலில் கேபரா அமாக்ரஸ் எனப்படும் இதன் மார்புப் பகுதியிலுள்ள முதுகெலுப்புகளும், மற்ற எலும்புகளின் உட் பொருளும் நெஞ்சின் தசைகளை வலுவாக்கும். இதனால் மூச்சு தடைபடுதலின் துன்பங்குறையும் இது இத்ரிபலே குடுடி என்னும் யூனனி மருந்திற் சேரும் இம்மருந்து மூச்சு மண்டலப் பிணிகளிலும், அவற்றின அழற்சியிலும் கொடுக்கப்படுகின்றது.

14 ஆனைத்தந்தம் (வடமொழி: ஹஸ்தி தந்தம், ஆங்கிலம்: ஐவரி) : ஆனைத்தந்தம் அவ்விலங்கின் பல்லேயாகும். இந்திய யானை எலெஃபாஸ் மாக்சிமஸ் என்றும் ஆப்பிரிக்க யானை எலெஃபாஸ் ஆஃப்ரிக்கானஸ் என்றும் விலங்கியல் கூறும். தந்தம் ஒரு துவர்ப்பியும் அழற்சியகற்றியுமாகும் இது பெண்களின் மலட்டுத் தன்மையை நீக்குமென்பார். இது ஆயுர்வேதத்தில் கோரோசனாதி குடிகாவிற்சேரும் இம்மருந்து விடமித்த சுரங் களிலும், மார்புச்சளியடைப்பிலும் கக்குவான் இருமலிலும் பயன்படும். உண்மையான ஆனைத்தந்தம் வடிகட்டப்பட்ட புற ஊதாக் கதிரொளியில் தனித்த நீல நிறத்தோடு ஒளிரும். இதனால் போலிச்சரக்கு இன்னதெனத் தெரிந்து நீக்கலாகும்.

## 4. கொம்புகளும் இறகுகளும்

கொம்புகளும் இறகுகளும் எலும்புகளின்றும் தனித்த பண்புடையவை. இவை உதிர்ந்து போயின் மீண்டும் புதுப்பிக்கப் பட்டுவிடும் தன்மையன. எலும்புகள் இத்தன்மையனவல்ல.

15. ஆட்டுக்கொம்பு வடமொழி : அஜச்ரிங்கம், ஆங்கிலம் கோட் ஹார்ன்) ஆட்டெலும்பு சேரும் ஆயுர்வேத மருந்தான கோரோசனாதி குடிகா, விடமித்த சுர நிலைகளிற் கொடுக்கப் படுகின்றது.

16. எருமைக் கொம்பு : வடமொழி : மஹிஷசிருங்கம், ஆங்கிலம் : பஃபெலோஹார்ன்) : விலங்கியலில் எருமை பாஸ் பபூலஸ் எனப்படும் இதன் கொம்புகள் உட்குழலற்றவை யாதலின் மாட்டுக் கொம்பினின்றும் தனித்தறியப்படும். எருமைக் கொம்புச் சீவல் 50 பங்கும், வெடியுப்பு 100 பங்கும் சேர்த்துக் காய்ச்சப்படின்

உருகிப்பாகாகும். இந்நிலையில் எடுத்து ஊற்றிக் குளிரவைப்பின் இளங்கருஞ் சிவப்பு நிறத்ததும், கருகும் எருமைக் கொம்பின் நாற்றமுடையதும், பளிங்கென நொறுங்கக் கூடியதும் உப்பின் சுவையுடையதுமான பிடாலவணம் கிடைக்கும். இது கல்லீரல் மண்ணீரல் வீக்கங்களிலும், செரிமானக் கோளாறுகளிலும் கொடுக்கப்படும்.

17. மான்கொம்பு : வடமொழி : சிருங்கம், ஆங்கிலம் : ஆன்ட்லர்ஸ் ஆப் டீயர், யூனானி : அல்கரான்) : இது மான்களின் கலைக்கோடு. புள்ளிமான் விலங்கியலில் ஆக்சிஸ் ஆக்சிஸ் என்றழைக்கப்படும். இது ஆயுர்வேதியரால் சிருங்க பஸ்மமாகவும்; யூனானியரால் குஷ்தே அல்கரானாகவும், சித்தரால் மான் கொம்பு பற்பமாகவுஞ் செய்யப்பட்டு, மார்பு நோய், இதய நோய் இவற்றிற் சிறப்பொடு பயன்படுத்தப்படுகின்றது. பற்பங் கிடைக்காத விடத்து நீர்விட்டுத் தேய்த்த மான்கொம்புப் பசை பயன் தரும். உள்ளுக்குங் கொடுத்து வெளியிலும் பூசுவர்.

18. காண்டாமிருகக் கொம்பு : (ஆங்கிலம் : ரைனோ ஹார்ன்) : வடகிழக்கிந்தியக் காடுகளிற்றன்னிச்சையாய்த் திரியும் இக்காண்டாமிருகம், தன் மூக்கின்மேல் தனித்துப் பின்னோக்கி வளரும் கொம்புடையது. இது விலங்கியலில் ரைனோசிஸ் யூனிகார்னிஸ் எனப்பெயர் பெறும். ஆப்பிரிக்க இனத்திற்கு இரண்டு கொம்புகள் ஒன்றன்பின் ஒன்றாக உண்டு. இக்கொம்பு, உண்மையில், ஒன்று கூடி ஒட்டி வளர்ந்த மயிர்க்கற்றையே யாகும். இந்நுண்ணமைப்பினால், போலிச்சரக்கு உருப்பெருக்கியினால் ஆயப்பட்டுத் தனிப்படுத்தப்படும். காண்டாமிருகக்கொம்பு எலும்புருக்கி நோயிலும், பித்தம் அதிகரித்த நிலையிலும், அது பைத்தியமாகிய நேரத்திலும் பெரிதும் பயன் தருவதென்று நூல்கள் கூறும். மானசமித்திரம் என்னும் ஆயுர்வேத மருந்தில் இக்கொம்பு சேருகின்றது. இம்மருந்து பைத்தியத்திலும், மறதியிலும் பயன் தரும்.

19. மயிற் பீலி : (வடமொழி : மயூரபிஞ்சம், ஆங்கிலம் : பீகாக் ஃபெதர்ஸ்) : மயிலின் விலங்கியற் பெயர் – பேவோ க்ரிஸ்ட்டேட்டஸ். ஆண் மயிலுக்கே நீண்டபீலிகளையுடைய தோகை உண்டு. மயிற்பீலியில் செப்புச்சத்துள்ளதென சித்த நூல்கள் கூறும். மயிற்பீலிச்சாம்பல், சீரகத்துடனுந் திப்பிலியுடனுஞ் சேர்த்துப் பொடிக்கப்பட்டு மயிலிறகாதிச் சூரணமென்று சித்த முறையில் விக்கல், வாந்தி, மயக்கம், வயிற்றுப் பொருமல் ஆகிய நிலைகளிற் கொடுக்கப்படும். மயூரபிஞ்ச மசி யென்பது ஆயுர்வேத மருந்து.

## 5. ஊன்

20. ஆட்டு இறைச்சி: (வடமொழி: அஜமாம்சம், ஆங்கிலம்: மட்டன்): ஆட்டின் ஊன் சிறந்த ஊன் பெருக்கியும் உடலுரமாக்கியுமாம். இதனின்றும் பிழிந்த சாறு அமிர்தப்பிராச கிருதம், பிருகத்சாகலாதி கிருதம், மகாமாஷத்தைலம் மற்றும் மானல்லேகம் ஆகிய ஆயுர்வேத மருந்துகளிற் சேரும். இம் மருந்துகள், முறையே இதயநோய்கள், பக்கவாதம் பிணிகளால் உடல் வற்றிப்போதல் ஆகிய நிலைகளிற் பயன்படுகின்றன.

## 6. கொழுப்பு

21. ஒட்டகக்கொழுப்பு (யூனானி: மயாயிஷுத்ரே அராபி): ஒட்டகத்தின் திமில்களில் பெரும்பாலும் கொழுப்பு இறுகிக் காணப்படுகின்றது. இது சிறந்த உணவுப் பொருளும் உடலுரமாக்கியும் ஆகும். ஆண்மையையும், புணர்ச்சியாற்றலையும் பெருக்குதற்கு யூனானி மருத்துவ முறையிற் செய்யப்படும் லபூபே கபீரில் இது சேருகின்றது. இந்திய ஒட்டகம் விலங்கியலாளரால் கெமெலஸ் ட்ரொமொடேரியஸ் என்றழைக்கப்படும்.

## 7. குருதி

22. முயலின் குருதி: (வடமொழி: சசரக்தம், ஆங்கிலம்: ராபிட் ப்ளட்) முயலின் செந்நீர் பவழ பற்பஞ் செய்யுமுறையிற் பயன்படுத்தப்படுகின்றது. இது ஆஸ்துமா, தொண்டை மற்றும் மார்புச்சளியால் உண்டாகும் திணறல், அழற்சி இவற்றிற்குக் கொடுக்கப்படும். இச்செந்நீர் முடியை வளர்க்கும், ஊனைப் பெருக்கும். இது சசவாசாதி கிருதமென்னும் ஆயுர்வேத மருந்திலுஞ்சேரும். தென்னிந்தியக் காட்டுமுயல் விலங்கியலில் லீப்பஸ் ருஃபிகார்டேட்ஸ் எனப்பெயர் பெறும்.

## 8. உணவுப் பாதையைச் சார்ந்த சுரப்பிகளினின்றும் பெறப்படும் பொருட்கள்

23 பித்தம்: (வடமொழி: பித்த; ஆங்கிலம்: பைல்) பல மீன், ஊர்வன, பறவை, மற்றும் பாலூட்டிகளினத்தைச் சேர்ந்த உயிர்களின் பித்தங்கள் மருந்திற்கொள்ளப்படுகின்றன. இதில் பித்த உப்புக்களும் பித்த சாயங்களும் உள்ளன இவை பெரும்பாலும் விடமித்த சுரங்களிற் பயனும்.

இவ்வாறு பயன்படும் சில உயிர்கள்:

1. மீன் — லேபியோ ரோஷீத்தா
2. உடும்பு — வெரானஸ்

3. முதலை — க்ரோக்கொடைல்ஸ்
4. நல்ல பாம்பு — நாயா நாயா
5. ஆமை — ட்டெஸ்ட்டுடோ எலிகான்ஸ்
6. புரு — கொலும்பா டொமெஸ்ட்டிக்கா
7. கோழி — கேல்லஸ் டொமெஸ்ட்டிக்கஸ்
8. மயில் — பேவோ க்ரிஸ்ட்டேட்டஸ்
9. காட்டுப்பன்றி — சுஸ் ஒரிஸ்ட்டேட்டஸ்
10. எருமை — பாஸ் பபூலஸ்
11. ஆடு — கேப்ரா எகாக்ரஸ்
12. ஒட்டகம் — கெமெலஸ் ட்ரொமொடேரியஸ்
13. ஆனை — எலெஃபாஸ் மாக்சிமஸ்
14. குதிரை — ஈக்வஸ் கெபால்லஸ்

சூசிகாபரண ரசமென்னும் ஆயுர்வேத மருந்தில் பத்து உயிர்களின் பித்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இது சூதிகாரோகங்கள், மற்றும் குடற்காய்ச்சல் ஆகிய பிணிகளிற் கொடுக்கப்படும். ஆனந்த பைரவம், ராஜராஜேசுவரம் ஆகிய சித்த மருந்துகள் சீதாங்கசந்நி, மற்றும் பதின்மூன்று சந்நிகளும் தீர்க்கக் கொடுக்கப்படுகின்றன.

24. நல்ல பாம்பின் நஞ்சு : (வடமொழி : சர்ப்பவிஷம் ஆங்கிலம் : கோப்ரா வெனம்) : நல்ல பாம்பின் நஞ்சு மிக்க ஆற்றலுடைய இதயத்தூண்டியாகும். இது தருணார்க்க ரசம் மற்றும் சமகரள தருணார்க்க ரசம் ஆகிய ஆயுர்வேத மருந்துகளில் சேர்க்கப்படுகின்றது. இவை சந்நிபாத சுரங்களிற் பயன்படுகின்றன,

## IX. சிறுநீர் உறுப்புக்கள், பிறப்புறுப்புக்கள் மற்றும் துணைப்பிறப்புறுப்புக்களினின்றும் பெறப்படும் பொருட்கள்

சிறுநீர் (மூத்திரம்), பால், கஸ்தூரி, புனுகு, காளையின் (ஆண்குறி) நரம்பு, கோழி முட்டை இவை இவ்வகுப்பிலடங்கும்.

25. சிறுநீர் அல்லது மூத்திரம் : (வடமொழி : மூத்ரம், ஆங்கிலம் : யூரின்) : மாடு, வெள்ளாடு, குதிரை, கழுதை இவற்றின் சிறு நீர்கள் பல மருந்துப் பொருட்களைச் சுத்தி (ஆயுர்வேதம் : சோதனம்) செய்யவும், மருந்தொடு கூட்டவும் பயன்படுகின்றன. இவற்றுள் பசுவின் மூத்திரமே பெருமளவிற்

பயன்படுத்தப்படுகின்றது. மற்றவை குறிப்பிட்டவிடத்துச் சிறு மனப்பான்மையே கையாளப்படும். மூத்திரங்கள் பொதுவாக நெடியுடன் கூடிய காரத்தன்மையும் உப்புச்சுவையுமுடையன. பசுமூத்திரம், கருநாபி, கலப்பைக்கிழங்கு, ஊமத்தைவிதை முதலியவற்றைச் சுத்திசெய்யவும், குதிரை மூத்திரம் வைக்கிராந்த சுத்திக்கும் உபயோகமாகிறது. வெள்ளாட்டு மூத்திரம் நிர்க்குண்டித்தைலம் (ஆயுர்வேதம்) ஆகிய தைல வருக்கங்களிலும் சேரும்.

26. பால்: (வடமொழி: க்ஷீரம், ஆங்கிலம்: மில்க்) பசு, எருமை, வெள்ளாடு, கழுதை இவற்றின் பாலும் மற்றும் தாய்ப் பாலும், முறையாகக் குறிப்பிடப்பட்ட மருந்து செய்முறைகளிற் பயன்படும். இங்கும், பசுவின்பாலே மிகப்பல மருந்துகளிற் சேர்க்கப்படுகின்றது, அதுமட்டுமின்றி பசும்பால் பசும்பாலி னின்றும் பெறப்படும் தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய பல பொருட்கள் பெருமளவிற் பயன்படுத்தப்படுகின்றன. பசும் பால் க்ஷீரபலா தைலம் (ஆயுர்வேதம்) போன்ற பல தைலங் களிற் சேருகின்றது. பசுவின் நெய், கிருதங்கள் எனப்படும் நெய் மருந்துகளிற் பயன்படும். இலேகியங்களிலும் இது சிறு அளவிற் சேர்க்கப்படுகின்றது. நெய்யின் கெடாது காக்குந்தன்மையும், நீரிற்கரையா மருந்துக்களையுங் கரைக்குந் திறனும் பண்டை மருத்துவரால் ஆழ்ந்துணரப்பட்டுச் சிறப்பான முறையிற் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது.

27. கஸ்தூரி; (வடமொழி: கஸ்தூரி, ஆங்கிலம்: மஸ்க், யுனானி: மிஷ்க்): கஸ்தூரி, மாஸ்கஸ் மாஸ்க்கி ஃபெரஸ் என்னும் மானினின்றும் பெறப்படும் மணப்பொருளாகும். இம் மான் நேபாளம், காசுமீரம், தீபெத்து ஆகிய இமயவரையைச் சார்ந்த நாடுகளின் காட்டுப்பகுதிகளில் - கடல்மட்டத்தினின்றும் 8000 முதல் 12000 அடி வரையுள்ள உயரங்களிற்றன்னிச்சை யாகத்திரியும். ஆண்களுக்கு மட்டுமே கஸ்தூரிப் பைகள் உண்டு. இப்பைகளில் சுரக்கும் இளகிய பொருள் காற்றுப் பட்டவுடன் கெட்டித்து விடும். இது சிறிது நெய்ப்புத் தன்மையுள்ள மணல் போன்று, கருஞ்சிவப்பு நிறமும் தனித்ததொரு நறுமணமும் கொண்டது. கஸ்தூரி, உடல் வெப்பந்தூண்டுதலும், இசிவகற்று தலும், காமந்தூண்டுதலும் ஆகிய குணங்களையுடையது. நாட் பட்ட சுரங்களிலும், பிதற்றல், கபவாதம், சுவாசப்பிணிகள், வலிப்புகள் ஆகிய நிலைகளிலும் கஸ்தூரி சேர்ந்த மருந்துகள் பயன்படும். கஸ்தூரியின் மருந்துத்திறனே முதற்கண் நோக்கப் படுமே தவிர அதை மணப்பொருளாகக் கொள்வது அதற்குப்

பிற்பட்டதே. கஸ்தூரி மாத்திரை, பஞ்சபாணரசம், தசமூலாரிஷ்டம் கஸ்தூரி கருப்பு. தவாவுல் மிஷ்க் மொதாடில் பஜவாஹிர் ஆகிய ஆயுர்வேத சித்தயூனனிமருந்துகளில் கஸ்தூரி சேர்க்கப்படுகிறது.

28. நீர் நாய் விதை: (யூனனி: ஜுண்டுபேதஸ்தர், ஆங்கிலம்: கேஸ்ட்டோரியம்) இது கேஸ்ட்டர் பீவர் என்னும் நீர் வாழும் பாலூட்டியின் விதையுறுப்பாகும் இது ஒரு மணப் பொருள் ஊக்கியும் மோழையகற்றியும், இசிவகற்றியும் காமம் பெருக்கியுமாம். ஆயுர்வேதத்தில் கஸ்தூரி மாத்திரையிலும், யூனனியில் ஹப்பே அம்பரிலும் இது சேர்க்கப்படும்.

29. புனுகு: (வடமொழி: கந்தமார்ஜார வீர்யம் யூனனி ஜீபாத், ஆங்கிலம்: சிவெட்: புனுகுப் பூனையின் புனுகுச் சுரப்பியி னின்றும் கிடைப்பது. இளகி மெழுகு போன்ற தோற்றமும் மிக்க நறுமணமும் உடையது. இந்தியாவில், வைவெர்ரா, வைவெர்ரி குலா, மாஸ்கோத்திரா என்ற இனங்களைச் சேர்ந்த புனுகுப் பூனைகள் உள்ளன. ஆண் பெண் ஆகிய இரண்டும் புனுகுடையன வெனினும் பெண் பூனைகளே அதிகம் புனுகைச்சுரக்கும். அது மட்டுமன்றி அவை பயமுறுத்தப்பட்டும் சினமூட்டப்பட்டும் இருக்கும் நேரத்தில் அதிக அளவிற் புனுகு சேர்கின்றது. புனுகு ஓர் இசிவகற்றியும் காமம் பெருக்கியுமாம். இது தான்வந்தர குடிகா, கோரோசனாதி குடிகா, கஸ்தூரியாதி குடிகா மற்றும் நாசிரோக நாசத்தைலம் இவற்றிற் சேரும்.

30. காளையின் ஆண்குறி நரம்பு: (யூனனி: கசிபே - காவூ) இது சிறந்த காமப் பெருக்கியாகும். புணர்ச்சித்திறனைத் தூண்டும் யூனனி மருந்தான லபூபே கபீரில் இது சேர்க்கப்படுகின்றது.

31. கோழி முட்டை (வடமொழி அண்டம், யூனனி' பைய்ஸ்மொர்க், ஆங்கிலம் எக்.): வீட்டில் வளர்க்கப்படும் கோழி, விலங்கியலில் கேலஸ் டொமெஸ்டிக்கஸ் எனப் பெயர்பெறும். கோழி முட்டை, ஆயுர்வேத சித்த, யூனனி முறைகள் மூன்றிலும் பயன்படுத்தப்படுகிறது. முட்டையோடும் வீணாக்கப்படுவதில்லை. அது யூனனியில், ஆண்மைகுன்றியவர்க்கும், ஆற்றல் குறைந்த நஞ்சுகளை உட்கொண்டவர்க்கும் மருந்தாகும். குஷ்கே போஸ்தே பெய்ஸ்மொர்க் என்னும் பற்பத்திற் சேரும். முட்டையின் மஞ்சட் கரு, ஹல்வே பெய்ஸ் மொர்க் என்னும் யூனனி மருந்திலும், அண்டத்தைலம் என்னும் சித்த மருந்திலும் பயன்படுகின்றது. முட்டையின் வெண்கரு இரசகந்தி மெழுகு, படிக்கார பற்பம், சண்டமாருதச் செந்தூரம் ஆகிய சித்த மருந்துகளிலும், மர்ஹமே கஃபூரி என்னும் யூனனி மருந்திலும் கொள்ளப்படுகின்றது.

## X. முதுகெலும்பில்லா விலங்குகளாற் சுரக்கப்படும் பொருட்கள்

பவழம், முத்து, தேன், தேன்மெழுகு, பட்டுக்கூண்டு, கொம்பரக்கு ஆகிய பொருட்கள் இவ்வகுப்பிலடங்கும்.

32 பவழப்புற்றும் (வடமொழி: பிரவாளம், யூனானி: புஸ்த், ஆங்கிலம்: Red rocky corals) கொடிப்பவழமும் (வடமொழி: லதாப்பிரவாளம், யூனானி: மர்ஜான், ஆங்கிலம்: பிரெஷியஸ் கோரல்ஸ்): இப்பவழங்கள், மேட்ரிப்போரா, கொரால்லியம் ஆகிய இனங்களைச் சேர்ந்தவை. பவழ உயிர்கள் தம்மைச் சுற்றிச் சுரப்பித்துக்கொள்ளும் கூடுகளே இப்பவழங்கள். இவற்றிற் பெரும்பான்மை சுண்ணும்புப் பொருளும் சிறிய அளவு சாயப்பொருட்களும் உள. பவழம் நூல் முறைப்படி நீருக்கப்பட்டு, ஆயுர்வேதத்தில் பிரவாளபஸ்மம் என்றும் சித்த முறையில் பவழ பற்பம் என்றும் யூனானியில் குஷ்தேமர்ஜான் என்றும், இருமல், எலும்புருக்கி ஆகிய பிணிகளுக்கு மருந்தாக கொடுக்கப்படும் பவழபறபம், வசந்தகுசுமாகரம், பிரவாள ப்ஞ்சாமிர்தம் என்பன போன்ற பலமருந்துகளிலும் சேர்க்கப்படுகிறது.

33. முத்து (வடமொழி: மௌக்திகம், யூனானி: மர்வரீத் ஆங்கிலம்: பெர்ல்) முத்துச்சிப்பிகளில், சிப்பியோட்டுக்கும், உள்ளுயிரின் தோலுக்கு மிடையில் நுண்ணிய மணல்போன்ற பொருட்கள் புகுமாயின், அதைச்சுற்றி, சுண்ணும்புப் பொருள் சுரக்கப்பட்டு முத்தாகக் கெட்டியாகின்றது. தென்னிந்தியக் கடலிற் கிடைக்கும் முத்துச் சிப்பிகள் பிஸ்ட்டாடா மார்ரெட்டிஃபெரா என விலங்கியல்கூறும். முத்துப்பற்பம், ஆயுர்வேதத்தில் மௌக்திக பஸ்மமென்றும், யூனானியில் குஷ்தே மர்வரீத் என்றும் சொல்லப்படும். இது உடலிளைத்தல், நெஞ்சிற் கோழைக்கட்டு இவற்றிற்கு மருந்தாகக் கொடுக்கலாம். இது வசந்த குசுமாகரம், சுவர்ணமாலினீ வசந்தரசம், மகா வசந்த குசுமாகரம், ஆகிய மருந்துகளிலும் சேர்க்கப்படும்.

34. தேன் (வடமொழி: மது, யூனானி: சஹத், ஆங்கிலம்: ஹனீ): தேனீக்களில் பல இனங்கள் உண்டு. அவற்றிற் சில, எபிஸ் மெல்லிஃபெரா, எபிஸ் டார்சேட்டா, எபிஸ் இண்டிக்கா என்பன. தேன் ஒரு மிகச்சிறந்த உணவுப் பொருளாவதுடன் பசித்தூண்டியும், மலமிளக்கியும், கோழையகற்றியுமாகிய மருந்துக் குணங்களையுடையது. அது ஓர் அழுகலகற்றியாதலின் பிற மருந்துப்பொருட்களைக் கெடாமற் காக்கும். ஆதலால் இலேகியங்

களிற் சேர்க்கப்படும். ஆசவ அரிஷ்டங்களிலும் இது சிலவிடங்களிற் சேரும். சித்த ஆயுர்வேத யூனானி ஆகிய மூன்று முறைகளிலும் இது பயனாகின்றது.

35. தேன்மெழுகு: (வடமொழி: மதூச்சிஷ்டம், யூனானி: மோம், ஆங்கிலம்: பீஸ் வாக்ஸ்) இது தேனடையின் அறைச் சுவர்ப் பொருளாகும். வெளிப்பூச்சிற்கும் பயன்படுஞ்சில மருந்துகளில் இது சேரும். பாரிசவாயு, வீக்கம் இவற்றை இது போக்குமென்பர். சித்த முறையிலே சடாமாஞ்சிலொடு மஞ்சளுமுப்பும் தேன்மெழுகுஞ் சேர்த்துக் காய்ச்சி வடித்துத் தைலஞ் செய்கின்றனர். இது மயனத்தைலம் எனப்படும். மூட்டுக்களைப் பற்றிய வாதப்பிணியில் இம்மருந்து வெகுவாக வெளிப்பூச்சாகப் பயன்தருகின்றது. இதைப் போன்ற யூனானி முறையிலும் ரோகானே மோம் என்ற தைலஞ்செய்வர்.

36 பட்டுக்கூண்டு: (வடமொழி: கௌசேயம், யூனானி: அப்ரேஷம், ஆங்கிலம்: சில்க்கக்கன்) பட்டுப்புழுக்கள் தம்மைச் சுற்றிப் பின்னிக்கொள்ளும் கூண்டுகள் மட்டும் தனித்தெடுக்கப்பட்டு, உரமாக்கியாகவும், துவர்ப்பியாகவும், குருதி பெருக்கடக்கியாகவும் மருந்திற்கொள்ளப்படும். இது இதய நோய்களில் மிகவும் பயன் தருமென்ப, அர்க்கே அப்ரேஷம, கமீரே அப்ரேஷம் ஆகிய யூனானி மருந்துகளிலும், சூதகசந்நி சூதகசூலை, சூதக வெட்டை ஆகிய பிணிகளிற்றரப்படும் பட்டுக் கருப்பிலும் பட்டுக் கூண்டு சேரும்.

37. கொம்பரக்கு: (வடமொழி: லாக்ஷா, யூனானி: லாக், ஆங்கிலம்: லாக் ஸ்டிக்) கொம்பரக்கென்பது அரக்குப் பூச்சியால் தன்னைச் சுற்றிச் சுரப்பித்துக்கொள்ளப்படும் பொருளாகும். இந்தியாவிற் கிடைக்கும் அரக்குப் பூச்சி, கெர்ரியா லாக்கா என விலங்கியல் கூறும். இது சிறந்த குருதிப் போக்கடக்கியாகுமாதலால் எல்லாவிதக் குருதிப்போக்கையும் நிறுத்தக் கையாளப்படும். மேலும் இது புண்ணாற்றியாகவும் வேலை செய்கிறது. ஆயுர்வேதத்தில் லாக்ஷாசூரணம், பலா அசுவகந்தாதித் தைலம் இவற்றிலும், சித்த முறையில் அரக்குத் தைலத்திலும், யூனானியில் தவாவுல்லாக்கிலும் மற்றும் மேற்கண்ட மும்முறைகளின் பல மருந்துகளிலும் கொம்பரக்கு உபயோகிக்கப்படுகின்றது.

## 9. நோயாலுண்டாகுஞ்சில பொருட்கள்

கோரோசனம், மீனம்பர் ஆகிய சிறந்த மருந்துப்பொருட்கள் இவ்வகுப்பிலடங்கும். கோரோசனம் மாட்டினின்றும், மீனம்பர், மிங்கில மீனினின்றும் கிடைக்கும்.

38 கோரோசனம்: (வடமொழி, ஆங்கிலம்: கோரோசன்) மாடுகளின் பித்தப்பை அதன் நாளம் இவற்றிலுண்டாகுஞ் சில சிறு பிணிகளால் கோரோசனம் பிறக்கின்றதென்று விலங்கியல் மருத்துவர் கூறுவர். கோரோசனம் தனித்த உருண்டையான கட்டியாகவோ, அல்லது பல சிறு கட்டிகள் சேர்ந்த கட்டாகவோ அமையும் நிறத்தில் மஞ்சளும், சுவையிற் கசப்பும், உள்ளமைப்பில் அடுக்கடுக்காகவும, இருக்கும். மஞ்சள் நிறம் நாளடைவில் கருத்துவிடும். எளிதில் நொறுங்கும். இது பித்தப் பெருக்கியும் இசிவகற்றியுமாகிய செயல்களை உடையது. தனித்தோ கூட்டு மருந்தாகவோ, குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப் போக்கையும், காய்ச்சலையும் குணப்படுத்த இது கொடுக்கப்படுகின்றது ஆயுர்வேதத்தில் கோரோசனாதி குடிகாவிலும், சித்த முறையில் கோரோசனை மாத்திரை, மாந்த எண்ணெ இவற்றிலும் கஸ்தூரி மாத்திரையிலும் இது சேரும்.

39. மீனம்பர்: (ஆங்கிலம்: ஆம்பெர்கிரிஸ்): இது ஃபைசீட்டர் மேக்ரோ கெஃபாலஸ் என்னும் திமிங்கிலத்தின் குடலிலுண்டாகும் பொருள் இது வேட்டையாடிய திமிங்கிலத்தினின்றே அல்லது வெளிப்பட்டுக் கடலில் மிதக்குமபோதோ கண்டெடுக்கப்படுகின்றது. அரைக் கிலோகிராம் முதல் பத்து கிலோகிராம் வரை எடையுள்ள தனித்த கட்டிகளும் கிடைக்கும். இது கருஞ்சாம்பல் நிறத்தோடு வெள்ளைப்புள்ளிளுடைய நெய்ப்புத் தன்மை வாய்ந்த கட்டிகளாகவிருக்கும். உடையுந்தன்மையுடையது. நறுமணமுடையது. இத்திமிங்கிலம், கணவாய் மீன்களை உணவாகக்கொள்வதால், அம்பரிலும் கணவாய் ஒட்டுத் துண்டுகள் காணப்படுவது, நல்ல சரக்கிற்குச் சான்ருகும். மீனம்பர் மூன்று மருத்துவ முறைகளிலும் பயன்படும்.

முடிவுரை: இக்கட்டுரையிலிதுகாறும், ஏறத்தாழ நாற்பது வகையான விலங்கினங்களிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டது. இவை, அவ்வவற்றின் தோற்றம் பிறப்பு ஆகிய அடிப்படையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

---

தங்கள் சந்தாவை தயவுடன் அனுப்பக் கோருகிறோம். சந்தா அனுப்பாதவர்கள் அடுத்த மாதம் வி. பி. மூலம் அனுப்பவிருக்கும வைத்ய சந்திரிகையை ஏற்றுக்கொள்ளக் கோருகிறோம்.

# ஸஹஸ்ரயோகம்

## ஸ்ந்நிபாதத்தில் சிகிச்சை

921. சதுரக்கள்ளி, கலப்பைக்கிழங்கு, முயல்காதுத்தழை, தண்ணீர்விட்டான்கிழங்கு, நாயுருவி, செந்நாயுருவி, பிரண்டை, காஞ்சோரிவேர், சித்திரமூலம், முடக்கத்தான், வில்வவேர், ஆகாச கருடக்கொடி, சிறுகுறிஞ்சான், நருநீண்டிக்கிழங்கு, எலுமிச்சஇலை லோத்திரப்பட்டை, பாணல்வேர், குன்னிவேர் சித்தாமுட்டிவேர், ஜாதிவேர், ஆமணக்குவேர், கம்பிப்பாலைவேர், கையாந்தகரை, முக்குற்றி, மருள், விஷ்ணுக்கிராந்தி, பீளைவேர், சுட்டித்தாளி, புரசங்குச்சி நிலநாரகம், நிலப்பனைக்கிழங்கு, அருகம்புல், பாதிரி வேர், சிறுசுண்டைவேர், ஏகநாயகத்தின்வேர், விலாமிச்சவேர், முதியார் கூந்தல், வகைக்கு 50 கிராம், 8 லிட்டர் ஜலத்தில் போட்டுக்கஷாயம் வைத்து 2 லிட்டராகச் சுண்டவைத்து ஒருலிட்டர் வேப்பெண்ணை சேர்த்து திரிபலை, அதிமதுரம், தேவதாரு, மஞ்சிஷ்டி வேப்பம்பட்டை, வேங்கைவைரம், பாக்குப்பழம், ஆளரிசி, சன்னி நாயகம், கண்டி லெண்ணை, நெல்லிக்காய், கந்தகம், குந்திருக்கும், வால்மிளகு, திப்பிலி, ஜீரகம், மனோசிலை, சடாமாஞ்சி, திரிகடு, அரத்தை, அகில், தக்கோலம், நாவி, கோஷ்டம், கஸ்தூரி, பஞ்சகோலம், சகஸ்ரபேதி, கன்னூரம், சேங்கொட்டை, அஞ்சனக் கல், எல்லாம் சேர்த்து 5 கிராம் எடுத்துக் கல்கம் செய்து அரக்கு பதத்தில் வடித்துத் தேய்க்க ஸன்னிபாதம் தீரும்.

922. மூலைப்பால், ஆமணக்கெண்ணெய், கோழிமுட்டைத் தைலம், வேப்பெண்ணெய் வகைக்கு கால்லிட்டர், அதிமதுரம், குந்துருக்கம், தான்றிக்காய்ப்பட்டை, சந்தனம், பூநாகம், அரிதாரம் கல்கம் சேர்த்து அரக்கு பதத்தில் வடித்துக் குழந்தைகள் ஸன்னி பாதத்திற்குத் துவளைபோடத் தீரும்.

923 புளியம் இலை, சித்தாமுட்டிவேர், கருநொச்சி இலை, துளசி இலை, வாதக்கொடி இலை, ஆமணக்கிலை, ஊமத்தை இலை, ஆடாதோடை இலை, தொட்டாச்சுருங்கி இலை, ஆவில்ப்பட்டை, கொழுப்பை நாகணம், கோமராசி, மஞ்சள், இவை சமஎடை எடுத்து 8 லிட்டர் ஜலத்தில் கஷாயம் வைத்து 2 லிட்டர் ஆக்கி 2 கிலோ நெல்லிக்காயை 8 லிட்டர் ஜலத்தில் கஷாயம் வைத்து அதை 2 லிட்டர் மிதமாக்கி அவையும் மோர் 2 லிட்டர் காடி 2 லிட்டர் இவை எல்லாம் சேர்த்து வற்றவைத்துக் கெட்டியாகிற பொழுது எடுத்து ஆறவைத்து உடம்பு பூராவும் தேய்க்க ஸன்னி பாதம் தீரும்.

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele : " VENKATESH "  Phone : **3923**

**PRICE LIST FOR 1970**

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pu e Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |
| **PACHAKARPURAM** | | |
| Spl. Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| No. 2. | ,, | 85-00 |
| **BHASAMS** | | |
| Rajit Bhasam | per K. G | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |
| **PILLS (GUTTIKA)** | | |
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | ,, | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 3[illegible]-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.


இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

**தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:
4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)


Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S. Iswaran. L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street. Tiruchirapalli-2 Printed at Githa Press. Tiruchirapalli-2.